// அவசரம்// //தனிகவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 622 /அ 2 /2022 நாள் 21.02.2022

பொருள் பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் – அரசு பள்ளிகளில் உள்ள மின் இணைப்புகளுக்கு நீண்ட காலமாக செலுத்தப்படாமல் உள்ள மின்கட்டண நிலுவைத் தொகையினை செலுத்த கோரியது – நிலுவை தொகை உடன் செலுத்த கோருதல் – தொடர்பாக.

பார்வை திருப்பத்தூர், மேற்பார்வை பெறியாளர் அவர்களின் க,எண் 019/ மேபொ/திமிபவ/துநிகஅ/சஒபி/கமே/உ_1/கோ.மின் கட்டண நிலுவை / 2022, நாள் .03.2022

பார்வையில் காணும் தங்கள் கடிதத்தின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டத்திற்கு செலுத்த வேண்டிய மின் நுகர்வு நிலுவை தொகை **ரூ.9412996** /- ( ரூபாய் தொண்ணூற்று நான்கு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஆறு மட்டும் ) நீண்ட காலமாக செலுத்தப்படாமலும் சில மின் இணைப்புகளுக்கு 2016 முதல் இந்நாள் வரை நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலூர் வருவாய் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் மின் கட்டணத் தொகை நிலுவையில் உள்ள பள்ளிகள் விரைந்து **இம்மாத இறுதிக்குள்** ( 31.03.2022 ) நிலுவையில் உள்ள தொகையினை செலுத்திவிட்டு அதற்குரிய ரசீது நகலினை இவ்வலுவலக அ2 பிரிவில் உடன் சமர்பிக்குமாறு அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது,

மேலும், மேற்காண் நிலுவை தொகை உள்ள பள்ளிகள் இம்மாத இறுதிக்குள் செலுத்தாமல் உள்ளது என கண்டறியப்படின் அப்பள்ளியின் தலைமைஆசிரியர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது,.

**இணைப்பு**

மேற்பார்வை பொறியாளர் அவர்களின் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்
அனைத்து அரசு பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

**நகல்**

வேலூர், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது,